**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உடுமலைப்பேட்டை.**

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிகிழமை
(திருவள்ளுவராண்டு 20576, ஸ்ரீ பராபவ வருடம், சித்திரை திங்கள் 04 ஆம் நாள்)

**சுருக்கு முறை வழக்கு எண். 666/2019**
**CNR.No.TNTI0F-000922-2019**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | தமிழ்நாடு அரசு சார்பாக, உணவு பாதுகாப்பு அலுவலர், குறியீடு எண்.495, உடுமலைப்பேட்டை நகராட்சி, திருப்பூர். |
| //எதிர்// | | |
| எதிரி | – | A. ராமநாதன் (46/2019)<br>த/பெ. ஆதிலிங்க நாடார்,<br>நியூ அட்சயா பேக்கரி,<br>16/-A, தளி ரோடு,<br>எலையமுத்தூர் பிரிவு,<br>உடுமலைப்பேட்டை தாலுக்கா,<br>திருப்பூர் மாவட்டம். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரி மீது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 பிரிவு 59(i) -ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | எதிரி மீது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 பிரிவு 59(i) -ன் கீழ் |
| தீர்மானம் | – | முடிவாக அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 பிரிவு 59(i)-ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| புகார் நாள் | – | 08.11.2019 |
| கைது செய்யப்பட்ட நாள் | – | – |
| பிணையில் சென்ற நாள் | – | – |

| | | |
|---|---|---|
| கோப்பு நாள் | – | 08.11.2019 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 24.02.2025 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 06.04.2026 |
| தீர்ப்புரை நாள் | – | 17.04.2026 |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 08.11.2019–ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D.கருப்புசாமி, B.A., B.L., அவர்களும், முன்னிலையாகி, சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும் முன்வைக்கப்பட்ட இருதரப்பு வாதுரைகளும் கேட்டறிந்தும் இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் முன் விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>**தீர்ப்புரை**</u>

எதிரி மீது உணவு பாதுகாப்பு அலுவலர் குறியீடு எண்.495, உடுமலைப்பேட்டை நகராட்சி திருப்பூர் மாவட்டம், தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு :–

1) உடுமலைப்பேட்டை நகராட்சி உணவு பாதுகாப்பு அலுவலர் S.அம்ஜத் இப்ராகிம் கான் என்பவர் கடந்த 27.07.2018 ஆம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதியில் அமைந்துள்ள க.எண்.168–A, தளி ரோடு, எலையமுத்தூர் பிரிவு நியூ அட்சயா பேக்கரிக்கு ஆய்விற்கு சென்றதாகவும், தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு உணவு பாதுகாப்பு உரிமம் உள்ளதா என கேட்டதற்கு உள்ளது என்று தெரிவித்ததாகவும், பின்னர் பொதுமக்கள் நுகர்விற்காக அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த டீ(தேநீர்)

தயாரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த டீத்தூள் (TEA DUST LOOSE CONDITION) உணவு பொருளை ஆய்வு செய்ததாகவும், மேற்படி டீத்தூள் உணவு பாதுகாப்பு தரங்கள் சட்டம் 2006-ற்கு முரணாக அதன் தரம் இருக்குமோ என்று டீத்தூள்( LOOSE CONDITION) உணவு மாதிரி எடுத்து ஆய்வுக்கு அனுப்பும் எண்ணத்தை உரிமையாளர் திரு.A.ராமநாதன்(26) என்பவரிடம் தெரிவித்ததற்கு அவர் சம்மதம் தெரிவித்ததாகவும், பிறகு அருகில் இருந்த திரு.கணேசன்,(39) த/பெ.சுயம்புநாடார், என்பவரை பொருசாட்சியாக உணவு மதிரி எடுத்து முடிக்கும் வரை இருக்கும் படி கேட்டதற்கு சம்மதம் தெரிவித்ததாகவும், இந்நிலையில் படிவம் VA 2 பரதிகள் தயாரித்து சாட்சியின் ஒப்பத்துடன் ஒரு பிரதியை உரிமையாளரிடம் கொடுத்து அதற்கான ஒப்பம் மற்றும் சாட்சியின் ஒப்பம் பெற்றுக் கொண்டதாகவும், டீத்தூள் (TEA DUST LOOSE CONDITION) 4 கிலோ உணவு மாதிரியாக அதன் அப்போதைய விற்பனை விலையான ரூ.230/- (1 கிலோX4)யை கொடுத்து அதற்கான ரொக்க ரசீது பெற்றுக் கொண்டதாகவும், அது 4 சம பாகமாக பிரிக்கப்பட்டதாகவும், ஒவ்வொன்றையும் காக்கி கவரில் முழுவதும் சுற்றி ஒட்டி, உணவு பாதுகாப்பு மற்றும் விதிகள் 2011, விதி 2.4.1(8) உட்பிரிவின் கீழ் முறையாக நான்கு லேபில் தயார் செய்து ஒவ்வொரு பாக்கெட்டின் மீதும் ஒட்டி, காக்கி கவரில் ஒட்டி பார்சல் செய்யப்பட்டதாகவும், பார்சலின் மீது மாவட்ட நியமன அலுவலர் திருப்பூர் (உணவு பாதுகாப்பு) அவர்களிடம் இருந்து பெறப்பட்ட 24/027/498 சீரியல் நெ.70/2018-19 என்ற நான்கு பேப்பர் சிலிப்பைத் தனித்தனியாக ஒவ்வொரு பார்சலிலும் ஒட்டப்பட்டதாகவும், மேற்படி சிலிப்பிலும், காக்கி நிறத்தாளிலும் உரிமையாளர் ராமநாதன் என்பவரின் கையொப்பம் பெறப்பட்டதாகவும், பின்பு நூலினால் கட்டி அரக்கு சீல் வைக்கப்பட்டதாகவும், மேற்படி பார்சல் நான்காவது பகுதியை உரிமையாளரின் சொந்த செலவில் தேசிய உணவு பாதுகாப்பு தர நிர்ணய ஆணையத்தால் அங்கரிக்கப்பட்ட (NABL) ஆய்வகத்திற்கு (விதி 2.4.1(10)(iii)

அனுப்பி பரிசோதனை கொள்ள விருப்பம் கேட்டதற்கு உரிமையாளர் மறுத்ததற்கான ஒப்பம் பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும், மேற்படி உணவு மாதிரி எடுத்த டீத்தூள் (TEA DUST LOOSE CONDITION) வாங்கியதற்கான ரசீது (Invoice) எதுவும் இல்லை என்றும், தனக்கு விற்பனை செய்தவர் விவரம் எதுவும் தெரியாது என்றும், மேற்படி தயாரிப்பு மற்றும் விற்பனைக்கும் தானே முழு பொறுப்பு என்றும் எழுத்து மூலமாக தெரிவித்தார் என்றும், மேற்படி நான்கு பார்சல் ஒன்றின் மீது மாதிரி முத்திரை, பதிக்கப்பட்ட படிவம்–VI யை அரக்கு சீலிட்டு 27.07.2018 ஆம் தேதியன்று உணவுப் பகுப்பாய்வகம், மதுரைக்கு பதிவு தபால் பார்சல் மூலம் அனுப்பப்பட்டு அதற்கான இரசீது இத்துடன் இணைக்கப்பட்டதாகவும், 27.07.2018 ஆம் தேதி உணவு மாதிரி எடுத்த தகவலை நியமன அலுவலர், உணவு பாதுகாப்பு பிரிவு திருப்பூர் மாவட்டம் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், மீதமுள்ள 3 உணவு மாதிரிகளையும் உரிய படிவங்களுடன் (படிவம் VI) பார்சல் செய்து 27.07.2018 ஆம் தேதியன்று மாவட்ட நியமன அலுவலரிடம் ஒப்படைத்து அதற்கான ஒப்பம் பெறப்பட்டதாகவும், டீத்தூள் (TEA DUST LOOSE CONDITION) மதுரை உணவுப் பகுப்பாய்வாளரின் அறிக்கையின் படி Unsafe என தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், உணவுப் பகுப்பாய்வாளரின் 10.06.2019 ஆம் தேதியிட்ட முகப்புக் கடிதத்துடன் அறிக்கை படிவம் நியமன அலுவலர், அவர்களால் கடந்த 13.06.2019 ஆம் தேதியன்று பெறப்பட்டு, மேல் நடவடிக்கை எடுப்பதற்கான 13.06.2019 ஆம் தேதியன்று உடுமலை நகராட்சி உணவுப் பாதுகாப்பு அலுவலரால் நேரில் பெறப்பட்டதாகவும், மேற்படி பொருட்களின் மீதான உணவு பகுப்பாய்வாளரின் அறிக்கை படிவம்–B–யின் அறிக்கை எண்.0304/18–19, நாள்.10.06.2019, D.Dis.No.1151/A1/2018, O/o the Food Analysis Laboratory, Madurai அறிக்கை பெற்றப்பட்டதாகவும், டீத்தூள் (TEA DUST LOOSE CONDITION) உரிமையாளர் ராமநாதன் என்பவருக்கு உணவுப் பகுப்பாய்வாளர் அறிக்கை படிவம்–B மற்றும் மேல்முறையீட்டுப் படிவம் VIII உடன்

மேல்முறையீட்டு அறிவிப்பு கடிதம் 13.06.2019 ஆம் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டதாகவும், எனவே Unsafe என உணவுப் பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்டுள்ளதால் திரு.ராமநாதன் என்பவர் மீது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 பிரிவு 3(1)(zz) மீறி உணவு வணிகர்களுக்கான கடமையிலிருந்து தவறி, இழைத்துள்ள குற்றம் என்று கூறி உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 பிரிவு 59(i) மற்றும் விதிகள் 2011 ன் படி தண்டனைக்குரியது என்று கூறி இந்த தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அழைப்பாணையின் பெயரில் இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரி மீது உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 பிரிவு 59(i)–ன் கீழான குற்றத்திற்கான முதல் நோக்கு முகாந்தரம் இருப்பதாக நீதிமன்றம் திருப்தியுற்றதால் குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 251–ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து தமிழில் படித்துக்காட்டி விளக்கம் கேட்டபோது இவ்வழக்கின் எதிரி குற்றச்சாட்டை மறுத்து தான் குற்றவாளி அல்ல என தெரிவித்தார். மேலும் தன் மீது போடப்பட்ட வழக்கை விசாரணைக்கு உட்படுத்த வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்ய அரசு தரப்பில் வழிவகை செய்யப்பட்டது.

3) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்வதற்காக அரசு தரப்பில் 05 சாட்சிகள் காண்பிக்கப்பட்டு 03 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.16 வரையிலும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:**

4) அ.சா.1 அம்ஜத் இப்ராஹிம் கான் என்பவர் 2018 ம் ஆண்டு உடுமலை

உணவு பாதுகாப்புத் துறையில் பாதுகாப்பு அலுவலராக பணியில் இருந்த போது கடந்த 27.07.2018 ஆம் தேதி காலை 09.30 மணியளவில் எலையமுத்தூர் நியூ அக்சயா பேக்கரியில் சோதனை மேற்கொண்டுள்ளார். அங்கு சென்று அறிமுகம் செய்து கொண்டு, உணவு பாதுகாப்பு துறையிலிருந்து உரிமம் பெற்றுள்ளிர்களா என்று அ.சா.1 கேட்டதற்கு அவர்கள் உரிமம் பெற்றுள்ளதாக கூறி உரிமத்தை காட்டியுள்ளார்.

5) மேலும் மேற்படி கடையில் உள்ள உணவை சோதனை செய்து பார்த்ததில் அங்கிருந்த லூஸ் கண்டிசன் டீத்தூள் கலப்படம் உள்ளதோ என்று சந்தேகம் ஆனதால், மேற்படி டீத்தூளை உணவு மாதிரியாக எடுக்கலாமா என்று கேட்டதற்கு அவர் அதனை எடுக்கலாம் என்று கூறியுள்ளார். அதற்காக படிவம் 5A இரண்டு பிரதிகளை தயார் செய்து சம்பவ இடத்திலேயே ஒரு நகலை பொது சாட்சியாக கணேசன் என்பவரை சாட்சி கையொப்பம் பெற்று உரிமையாளரிடம் கொடுத்துள்ளார். படிவம் 5A அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு டீத்தூள் லூஸ் கண்டிசனை 4 சமபாகமாக பிரிப்பதற்காக டீத்தூள் விலையை கேட்டபோது, ரூ.230/- என கூறி உரிமையாளர் கூறியுள்ளார். அ.சா.1 4*1 கிலோ டீத்தூள்ளிற்கு ரொக்க ரசீது தயாரித்து சாட்சி கசேணசனிடம் கையொப்பம் பெற்று பணத்தை கொடுத்து 4 கிலோ டீத்தூளை உணவு மாதிரியாக எடுத்துள்ளார். ரொக்க ரசீது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) பின்பு வாங்கிய 4 டீத்தூளை மாதிரியை சமமாக பிரித்து நான்கு லேபிள் தயார் செய்து ஒவ்வொரு பேக்கின் மேல் ஒட்டி பார்சல் செய்து அதன் மேல் கடையின் உரிமையாளர் கையொப்பம் மற்றும் அ.சா.1ன் கையொப்பம் இட்டு மீண்டும் ஒரு கெட்டியான காகிதத்தால் தனிதனியாக ஒரு பொட்டலம் ஆக்கி, இதன்மீது மாவட்ட நியமன அலுவலரால் வழங்கப்பட்ட கோடு எண்.24027495 வ.எண் 702018 என்ற வெள்ளை நிற தாளினை ஒவ்வொரு பொட்டலத்தின்

மீதும் ஒட்டியுள்ளார். பின்னர் ஒட்டப்பட்ட பேப்பர் சிலிப்பிலும் மற்றும் பொட்டலத்திலும் கடையின் உரிமையாளர் கையொப்பம் பதியுமாறு கையொப்பம் பெற்று, ஒவ்வொரு உணவு மாதிரியின் மேலிருந்து கீழாக நூல் கொண்டு நான்கு பொட்டலங்களிலும் இறுக கட்டி முடிச்சி இட்டுள்ளார்.

7) மேலும் பொட்டலங்களில் நூல் முடிச்சிகளில் அரக்கு உலோக முத்திரை பதித்து அதற்கான படிவம் தயாரித்து ரசீது தயார் செய்துள்ளார். 4 உணவு பொட்டலங்களை 1, 2, 3, 4 என வரிசைப்படுத்தி 4வது பொட்டலத்தை உரிமையாளரே தனியார் உணவு ஆய்வகத்திற்கு அனுப்ப கொள்ளலாம் என்று முன்னுரிமை கொடுத்த போது அவர் அதை வேண்டாம் என்று கூறியுள்ளார். டீத்தூள் டஸ்ட் தயாரிப்பு நிறுவனத்தின் கொள்முதல் ரசீது உள்ளதா என்று உரிமையாளரிடம் கேட்ட போது அவர் ரசீது இல்லை என்றும், மேலும் ஏதாவது தவறு நடந்தால் நானே முழு பொறுப்பையும் ஏற்று கொள்வதாக எழுதி கொடுத்தார் என்றும் கூறியுள்ளார். முழு பொறுப்பு என எழுதி கொடுத்த கடிதங்கள் – 3 எண்ணிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், உணவு விற்பளையாளரின் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8) பின்னர் உணவு மாதிரி 1 பாகத்தையும் உணவு படிவங்கள் 6 தயாரித்து பகுப்பாய்விற்கு அன்றைய தினமே மதுரை உணவு பகுப்பாற்விற்கு பார்சல் மூலம் அனுப்பி ரசீது பெற்று கொண்டுள்ளார். படிவம் 6 அ.சா.ஆ.5 ஆகவும், நியமன அலுவருக்கு கொடுத்த கடிதம் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி அரக்கு முத்திரை பதித்த தாள் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் உணவு மாதிரி அனுப்பியது போக மீதம் இருந்த 3 பொட்டலங்களையும் பகுப்பாய்விற்கும் அனுப்பிய விவரத்தையும் மாவட்ட நியமன அலுவலருக்கு தகவல் கொடுத்து அன்றைய தினமே நேரில் சென்று ஒப்படைத்து ஒப்புகை கடிதம் பெற்றுக் கொண்டுள்ளார். அந்த ஒப்புகை கடிதம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9) பின்னர் கடந்த 27.07.2018 ம் தேதியன்று அனுப்பப்பட்ட டீத்தூள் லூஸ் கண்டிசனை மதுரை உணவு பகுப்பாய்வாளரால் பகுப்பாய்வு செய்யப்பட்டு, கடந்த 10.06.2019 ம் தேதியிட்ட முகப்பு கடிதம் கொண்டு மேற்படி உணவு மாதிரியானது பாதுகாப்பற்ற முறையில் உள்ளது என்று நியமன அலுவருக்கு அறிக்கை வரப்பட்டுள்ளது. படிவம் 6 மாதிரி அரக்கு முத்திரை பதித்த அறிக்கை அனுப்பியதற்கான ரசீது அ.சா.ஆ.9 ஆகவும், உணவு பகுப்பாய்வின் அறிக்கை அ.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) பின்னர் மாவட்ட நியமண அலுவலருக்கு கடந்த 13.06.2019 ம் தேதி அறிக்கை கிடைக்கப்பெற்ற உடன் இது குறித்து தகவலை அனுப்பி தங்களிடம் இருந்து எடுக்கப்பட்ட உணிவு மாதிரியை அரசால் பரிந்துரை செய்யப்பட்ட வேறு ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்ய விரும்பினால் பரிசோதனைக்குரிய தொகையுடன் 30 நாட்களுக்குள் முறையீடு செய்து கொள்ளலாம் என்று நியமண அலுவலர் கடையின் உரிமையாளர் ராமநாதனுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அந்த கடிதம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டள்ளது. பின்னர் அந்த படிவத்தை அ.சா.1 க்கு அனுப்பியுள்ளார்கள்.

11) பின்னர் குற்ற வழக்கு தொடர அனுமதி வேண்டி நியமண அலுவலருக்கு கொடுத்தபோது, அவர் இசைவு கடிதம் வேண்டி ஆணை அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அந்த கடிதம் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. குற்ற வழக்கு தொடர கடந்த 26.09.2019 ம் தேதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்த சமயத்தில் அ.சா.1 பணி மாறுதல் ஆகிவிட்டதால் பின் வந்த உணவு பாதுகாவலர் வழக்கை தொடர்ந்துள்ளார்.

12) அ.சா.2 கணேசன் என்பவர் உடுமலையில் தாண்டகவுண்டன் தோட்டத்தில் வசித்து வருகிறார். தற்சமயம் தாண்டா கவுண்டன் தோட்டத்தில் அருகில் டீ மாஸ்டராக வேலை செய்து வருகிறார். வழக்கு சமயத்தில் தளி ரோட்டில் உள்ள நியூ அச்சயா பேக்கரியில் டீ மாஸ்டராக பணி புரிந்து வந்துள்ளார்,

கடந்த 27.07.2018 ம் தேதியன்று மதியம் நேரத்தில் உணவு பாதுகாப்பு அலுவலர் அச்சயா பேக்கரிக்கு வந்து சோதனை செய்து டீ போடும் இடத்தில் உள்ள டீ தூள்களை உணவு மாதிரிக்காக எடுத்துள்ளார், அந்த உணவு மாதிரியை எடுத்து ஆய்வுக்கு அனுப்புவதாக உணவு பாதுகாப்பு அலுவலர் கூறியுள்ளார். உணவு பாதுகாப்பு அதிகாரி மாதிரி டீ தூள்கள் சுமார் 4 கிலோ எடுத்ததற்கு 230 ரூபாய் கொடுத்துள்ளார். மாதிரி எடுக்கும் பொழுது உரிமையாளரும் இருந்தார், பெயர் ராமநாதன் ஆஜர் எதிரிதான். 4 கிலோ டீ தூளை 4 பொட்டலங்களாக தயார் செய்தில் அ.சா.2 ம், ஆஜர் எதிரியும் கையொபப்பம் செய்துள்ளார். மூன்று கையொப்பங்களை அ.சா.2 செய்துள்ளார். உணவு மாதிரியை எடுத்ததற்காகவும் ஆய்வுக்கு அனுப்புவதற்காகவும் பணம் செலுத்தியதற்காகவும் சாட்சி கையொப்பம் செய்துள்ளார். அ.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பம் அ.சா.2 உடையது தான் என கூறியுள்ளார். உணவு மாதிரிக்காக டீ தூள் எடுத்ததற்காக தயாரிக்கப்பட்ட அ.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பம் அ.சா.2 உடையது தான், அந்த கையொப்பம் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள ரொக்க ரசீதுல் உள்ள சாட்சி கையெப்பம் அ.சா.2 உடையது தான், அந்த கையொப்பம் அ.சா.ஆ 14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. டீ தூள் எடுத்தது எந்த மாதிரி இருந்தது என்றால் பக்கெட்டில் இருந்து எடுக்கப்பட்டது, அதற்குப் பிறகு கையொப்பம் பெற்றுக் கொண்டு உணவு பாதுகாப்பு அலுவலர் சென்றுவிட்டார். இது சம்பந்தமாக அ.சா.2 யை விசாரித்துள்ளார்கள். இதன் பிறகு உரிமையாளர் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது அ.சா.2 க்கு தெரியாது.

13) அ.சா.3 விஜயகுமார் என்பவர் கடந்த 27.07.2018 ம் தேதியன்று உடுமலை நகராட்சியில் பணியில் இருந்த போது S.அம்ஜத் இப்ராம்கான் என்பவர் உடுமலைப்பேட்டை நகராட்சியில் அமைந்துள்ள New அக்சயா பேக்கரியில்

விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த டி டஸ்ட் லூஸ் கண்டிசன் என்ற உணவு பொருளின் தரத்தை ஆய்வு செய்த ஆய்விற்கு உட்படுத்தி அறிக்கை பெற்று வழக்கு தொடர அனுமதி வேண்டி கடிதம் பெற்ற நிலையில், அவர்(அ.சா.1) பணி மாறுதல் ஆகி விட்டதால் கடந்த 01.07.2019 ம் தேதி பொறுப்பிற்கு வந்த அ.சா.3 யிடம் கோப்பினை பெற்றுக் கொண்டுள்ளார். உணவு பாதுகாப்பு அலுவலர் என்பதற்கான அரசிதழ் அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு ஆணையாளர் கடந்த 26.09.2019 ஆம் தேதி அனுமதி வழங்கியுள்ளார். ஆணையாளர் உத்தரவு நகல் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரி ராமநாதன் என்பவர் மீது நீதிமன்றத்தில் உணவு பாதுகாப்பு சட்டப்படி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

14) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமானவற்றை எதிரியிடம் குற்றவியல் நடைமுறை தொகுப்புச் சட்டம் 1973, பிரிவு 313(1) (ஆ)–ன் கீழ் விளக்கி விசாரணை செய்தபோது எதிரியானவர் பதிலினை தனியாக தாக்கல் செய்துள்ளதின் சுருக்கம்:–

15) இவ்வழக்கில் பயன்படுத்தும் டீத்தூள் தரமற்றது என வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றும், ஆனால் அட்சயா பேக்கரி ஆரம்பித்த நாள் முதல் தற்போது வரை தரமான கம்பெனி டீத்தூள்களையே பயன்படுத்தி வருகிறேன் என்றும், மேற்படி டீயின் சுவைக்காக AVT, 3 Roses, Gold Cup உள்ளிட்ட 3 வகையான டீத்தூளை பயன்படுத்தி டீ தயாரிப்பது வழக்கம் என்றும், மேற்படி வீதம் டீ தயாரிக்கும் போது அனைத்து விதமான டீத்தூள்களின் பாக்கெட்களையும் உடைத்து ஒன்றாக கலந்து ஏற்கனவே வைத்திருப்பேன் என்றும், அவ்வாறு வைக்கப்பட்டிருந்த டீத்தூள்களில் இருந்து சேம்பல் எடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி டீத்தூள் தான் சொன்ன

கம்பெனியிலிருந்து உரிய பில்களின் மூலம் பெறப்பட்டது என்றும், அதற்காக பில்களையும் இணைத்துள்ளதாகவும், அதன் தரத்தை நிர்ணயம் செய்ய அனுப்பப்பட்ட சேம்பல்கள் ஒரு மாத காலத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்தால் அதன் உண்மைத் தன்மை வெளிப்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு இல்லாமல் சுமார் 11 மாதங்களுக்கு மேலாக கிடப்பில் போடப்பட்டு பின்னிட்டே மேற்படி சூட் அனைலைஸரால் சோதனையிடப்பட்டுள்ளது என்றும், எனவே தான் பயன்படுத்திய டீத்தூள் அனைத்தும் தரமான கம்பெனி டீத்தூள்களே தவிர தரமற்றவைகள் அல்ல என்றும் பதில் அளித்தார். மேலும் எதிரி தனக்கு எதிரான அரசு தரப்பு சாட்சியங்களை மறுத்துரைத்தார். மேலும் தான் நிரபராதி எனவும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று கூறினார். எனினும் எதிரி தரப்பில் சாட்சிகள் யாரையும் ஆஜர்படுத்தி விசாரணைக்கு உட்படுத்தவில்லை.

16) கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தமது வாதுரையில், இவ்வழக்கில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட வாய்மொழிச் சான்றுகள் மற்றும் ஆவணச்சான்றுகள் வாயிலாக எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பால் நிரூபணம் செய்து விட்டதாகவும், அதனால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டுமென்று வாதிட்டார்.

17) கற்றறிந்த எதிரி தரப்பு வழக்குரைஞர் தமது வாதுரையில், உணவு மாதிரி அறிக்கையானது 11 மாதம் காலதாமதமாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது என்றும், குறிப்பிட்ட காலக்கெடுக்குள் பகுப்பாய்வு செய்து இருந்தால் உண்மை தன்மை தெரிந்திருக்கும் என்றும், மேற்படி டீயின் சுவைக்காக AVT, 3 Roses, Gold Cup உள்ளிட்ட 3 வகையான டீத்தூளை பயன்படுத்தி டீ தயாரித்துள்ளார் என்றும், மேற்படி 3 டீத்தூள்களும் தரமானதே என்றும், நல்ல கம்பனிகளை சார்ந்தவைகள் என்றும், சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் அரசு தரப்பில் சொன்னது போல் டீத்தூள் பயன்படுத்தவில்லை என்றும், எதிரியானவர் தரமான

கம்பெனி டீத்தூள்களை மட்டும் தான் பயன்படுத்தி வந்தார் என்றும், அதற்கான ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளார் என்றும், இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், மேலும் சாட்சி சான்றாவணங்கள் மூலம் எதிரி தான் இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதை அரசு தரப்பில் நிரூபிக்காததால் எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**பிரச்சனையும் தீர்வும்**

18) இருதரப்பிலும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இவ்வழக்கின் எதிரி மீதான உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலையச் சட்டம் 2006 பிரிவு 59(i)–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்க வேண்டியது இந்நீதிமன்றத்தின் கடமையாகும்.

19) இவ்வழக்கில் அ.சா.1 அம்ஜத் இப்ராஹிம் மற்றும் அ.சா.3 விஜயகுமார் ஆகியோர்கள் உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் ஆவார்கள். அ.சா.2 கணேசன் என்பவர் மேற்படி டீ கடையில் டீ மாஸ்டராக பணிபுரிந்து வந்துள்ளார்.

20) இவ்வழக்கில் அ.சா.1 ஆன உணவு பாதுகாப்பு அலுவலர் கடந்த 27.07.2017 ஆம் தேதி காலை 09.30 மணியளவில் எலையமுத்தூர் நியூ அக்சயா பேக்கரியில் சோதனைக்கு சென்றபோது, மேற்படி பேக்கரியில் உணவு பாதுகாப்பு துறையிலிருந்து உரிமம் பெற்றுள்ளிர்களா என்று கேட்டதற்கு அவர்கள் உரிமம் பெற்றுள்ளதாக கூறி உரிமத்தை காட்டியதாகவும், மேற்படி கடையில் உள்ள உணவை சோதனை செய்து பார்த்ததில் அங்கிருந்த லூஸ் கண்டிசன் டீத்தூள் கலப்படம் உள்ளதோ என்று சந்தேகம் ஏற்பட்டதால், மேற்படி டீத்தூளை உணவு மாதிரியாக எடுக்கலாமா கடையின் உரிமையாளரான இவ்வழக்கின் எதிரி ராமநாதன் என்பவரிடம் கேட்டதற்கு அவர் அதனை எடுக்கலாம் என்று கூறியதாக சொல்லியுள்ளார். மேற்படி அ.சா.1 ஆனவருக்கு தமிழக அரசிதழில் உணவுப் பாதுகாப்பு அலுவலராக வரிசை எண்.525–ன் படி

அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேற்படி உணவு பாதுகாப்பு அலுவலர் என்பதற்கான அரசிதழானது அ.சா.ஆ.15 ஆக அ.சா.1 ஆனவர் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி அ.சா.1 ஆனவர் மேற்படி சட்டப்பிரிவு 37–ன் படி நமது மாநில அரசிதழில் 20.04.2012 ஆம் தேதியன்று உணவு பாதுகாப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி மேற்படி அ.சா.1 ஆன உணவு பாதுகாப்பு அலுவலர் மேற்படி எதிரியின் கடைக்குள் சென்று சந்தேகப் பொருட்களை கைப்பற்ற சட்டப்பிரிவு 38–ன் படி அதிகாரம் பெற்றுள்ளார் என்பது தெரியவருகிறது.

21) மேலும் அ.ச.1 ஆன உணவு பாதுகாப்பு அலுவலர் இந்நிகழ்விற்கு பொது சாட்சியாக மேற்படி கடையில் இருந்த அ.சா.2 ஆன கணேசன் என்பவர் இருந்துள்ளதாக கூறியுள்ளார். மேற்படி நபரின் முன்னிலையில் அ.சா.1 ஆனவர் உணவு மாதிரிக்கு எடுத்து அ.சா.ஆ.1 ஆன படிவம் 5A–ன் வாயிலாக ராமநாதன் என்பவரிடம் இருந்து பெற்று அதற்காக ரொக்கம் ரூ.230/–யை எதிரியிடம் வழங்கியதாகவும், அ.சா.2 ஆன கணேசன் என்பவரிடம் சாட்சி கையொப்பம் பெற்றதாகவும் கூறியுள்ளார்.

22) மேலும், அ.சா.2 ஆன கணேசன் என்பவர் தனது முதல் விசாரணையில் கடந்த 27.07.2018 ம் தேதியன்று மதியம் நேரத்தில் உணவு பாதுகாப்பு அலுவலர் அச்சயா பேக்கரிக்கு வந்து சோதனை செய்து டீ போடும் இடத்தில் உள்ள டீ தூள்களை ஆய்விற்காக உணவு மாதிரிக்காக எடுத்ததாகவும் கூறியுள்ள நிலையில் அ.சா.1 ஆனவர் மேற்படி டீ கடைக்கு காலை 09.30 மணிக்கு சென்றதாக சொல்லியுள்ளார். இந்நிலையில் எத்தனை மணிக்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதைப் பொறுத்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆனவர்களின் சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளது.

23) மேலும் அ.சா.1 ன் முதல் விசாரணையில் உணவு பாதுகாப்பு அதிகாரி மாதிரி டீ தூள்கள் சுமார் 4 கிலோ எடுத்ததற்கு 230 ரூபாய் கொடுத்துள்ளார்.

மாதிரி எடுக்கும் பொழுது உரிமையாளரும் இருந்ததாகவும், பெயர் ராமநாதன் ஆஜர் எதிரிதான் என்றும், 4 கிலோ டீ தூளை 4 பொட்டலங்களாக தயார் செய்ததாகவும், உணவு மாதிரியை எடுத்ததற்காகவும் ஆய்வுக்கு அனுப்புவதற்காகவும் பணம் செலுத்தியதற்காகவும் அ.சா.ஆ.1, அ.சா.ஆ.2, அ.சா.ஆ.4 ஆகிய ஆவணங்களில் கையொப்பம் செய்ததாகவும் மேற்படி கையொப்பங்கள் தன்னுடையது தான் என்றும் கூறி, மேற்படி கையொப்பங்களின் முறையே அ.சா.ஆ.13, அ.சா.ஆ.14 என குறியீடு செய்யப்பட்டுள்ளது.

24) எனினும் அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் சாட்சி கணேசன் கடையில் வேலை செய்தவரா என்றால் அருகில் இருந்தவர், பொது சாட்சியாக போட்டேன் என்றும், கணேசன் என்பவரின் முகவரியில் கடை முகவரி தான் போட்டுள்ளீர்கள் என்றால் சரிதான் என்றும் பொதுவாக வெளி நபர்களாக அவர்களுக்கு தனி விலாசம் இருக்கும் என்றாலும் அதை போடவில்லை என்றால் சரிதான் என்று கூறியுள்ள நிலையில், அ.சா.1 ஆனவரின் சாட்சியத்தின் மூலம் அ.சா.2 ஆனவர் எதிரியின் கடையில் வேலை செய்தவர் அல்ல என கூறியிருப்பினும் அ.சா.2 ஆனவர் தனது முதல் விசாரணையில் தான் நியூ அட்சயா பேக்கரியில் டீ மாஸ்டராக பணிபுரிந்து வந்ததாக கூறியுள்ளார். மேலும் அரசு தரப்பு சாட்சிப் பட்டியலில் அ.சா.2 ஆனவரின் முகவரியாக எதிரியின் கடையின் முகவரி காட்டப்பட்டுள்ளது. ஆகையினால் அ.சா.2 ஆனவர் எதிரியின் கடையில் டீ மாஸ்டராக வேலை செய்து வந்துள்ளார் என்பது தெரியவருகிற நிலையில், அ.சா.1 ஆனவர் அதற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1 ஆனவர் டீ கடையை ஆய்வு செய்து மாதிரிகள் எடுத்து ஆய்வுக்கு அனுப்பியதைப் பொறுத்து சாட்சியாக இருந்த அ.சா.2 ஆனவரின் விவரம் குறித்து மாறுபட்டு கூறியுள்ளதன் மூலம் அ.சா.1 ஆனவர் மேற்படி கடைக்கு செல்லாமலேயே புள்ளி விவர கணக்கிற்காக வழக்கு தயார்

செய்ததாக வாதிடப்பட்டுள்ள நிலையில், அ.சா.2 ஆனவர் குறித்து அ.சா.1 ஆனவர் அளித்துள்ள சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருகிறது.

25) மேலும் அ.சா.1 ஆனவர் மேற்படி உணவு மாதிரிகளை 4 பாகங்களாக பிரித்து அதனை பொட்டலமிட்டதாகவும் பின்பு உணவு பாதுகாப்பு மற்றும் விதிகள் 2011, விதி 2.4.1(8) உட்பிரிவின் கீழ் முறையாக நான்கு லேபில் தயார் செய்து ஒவ்வொரு பாக்கெட்டின் மீதும் காக்கி கவரில் ஒட்டி பார்சல் செய்யப்பட்டதாகவும், பார்சலின் மீது மாவட்ட நியமன அலுவலர் திருப்பூர் (உணவு பாதுகாப்பு) அவர்களிடம் இருந்து பெறப்பட்ட 24/027/498 சீரியல் நெ.70/2018-19 என்ற நான்கு பேப்பர் சிலிப்பைத் தனித்தனியாக ஒவ்வொரு பார்சலிலும் ஒட்டப்பட்டதாகவும் மேற்படி சிலிப்பிலும், காக்கி நிறத்தாளிலும் எதிரி ராமநாதன் என்பரிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டதாகவும், மேற்படி நான்கு பார்சல் ஒன்றின் மீது மாதிரி முத்திரை, பதிக்கப்பட்ட படிவம்-VI யை அரக்கு சீலிட்டு 27.07.2018 ஆம் தேதியன்று மதுரை உணவு பகுப்பாய்வு கூடத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி அதற்கான இரசீதை பெற்றுக் கொண்டதாகவும், மீதமுள்ள மூன்று உணவு மாதிரிகளை மாவட்ட உணவுப் பாதுகாப்பு நியமன அலுவலருக்கு ஒப்படைத்து அதற்கான ஒப்புகை பெற்றுக் கொண்டதாகவும் கூறியுள்ளார். மேற்படி படிவம் 6 அ.சா.ஆ.5 ஆகவும், நியமன அலுவருக்கு கொடுத்த கடிதம் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி அரக்கு முத்திரை பதித்த தாள் அ.சா.ஆ.7 ஆகவும், ஒப்புகை கடிதம் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

26) மேலும் அ.சா.1 ஆனவர் மேற்படி உணவு மாதிரிக்கான பகுப்பாய்வு அறிக்கையினை மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் வழியாக கடந்த 13.06.2019 ஆம் தேதியன்று பெற்றுக் கொண்டதாகவும், இது குறித்து தகவலை அனுப்பி தங்களிடம் இருந்து எடுக்கப்பட்ட உணவு மாதிரியை அரசால் பரிந்துரை

செய்யப்பட்ட வேறு ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்ய விரும்பினால் பரிசோதனைக்குரிய தொகையுடன் 30 நாட்களுக்குள் முறையீடு செய்து கொள்ளலாம் என்று நியமன அலுவலர் கடையின் உரிமையாளர் ராமநாதனுக்கு அ.சா.ஆ.11 ஆன கடிதம் அனுப்பியதாகவும் கூறியுள்ளார்.

27) இந்நிலையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டம், 2006, பிரிவு 42–ன் படி,

> 42. Procedure for launching prosecution :-
>
> (1) The Food Safety Officer shall be responsible for inspection of food business, drawing samples and sending them to Food Analyst for analysis.
>
> (2) The Food Analyst after receiving the sample from the Food Safety Officer shall analyse the sample and send the analysis report mentioning method of sampling and analysis within fourteen days to Designated Officer with a copy to Commissioner of Food Safety.
>
> (3) The Designated Officer after scrutiny of the report of Food Analyst shall decide as to whether the contravention is punishable with imprisonment or fine only and in the case of contravention punishable with imprisonment, he shall send his recommendations within fourteen days to the Commissioner of Food Safety for sanctioning prosecution...."

என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் பிரிவு 42(2)–ன்படி உணவு மதிரி ஆய்விற்காக அனுப்பினால் 14 நாட்களுக்கு அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆனவர்களின் குறுக்கு விசாரணையில் உணவு மாதிரி எடுத்து எத்தனை நாட்களில் பாகுப்பாய்வு செய்ய வேண்டும் என்றால் 14 நாட்களில் என்றும் இந்த வழக்கில் 14 நாட்களில் பகுப்பாய்வு செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், 11 மாதங்கள் காலதாமதமாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ள

நிலையில், இவ்வழக்கு உணவு மாதிரிப் பொருளானது 27.07.2018 ஆம் தேதியன்று கைப்பற்றப்பட்டு அன்றே மதுரை உணவு பகுப்பாய்வு அலுவலகத்திற்கு பதிவு தபால் அனுப்பப்பட்டுள்ளது என்பதும் பின்னிட்டு 27.05.2019 முதல் 10.06.2019 வரை ஆய்வுக்கு உட்படத்தப்பட்டு அதன் அறிக்கையானது 10.06.2019 ஆம் தேதியன்று அனுப்பப்பட்டு 13.06.2019 ஆம் தேதியன்று நியமண அலுவலர் அவர்களால் பெறப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. இந்நிலையில் மேற்படி உணவு மாதிரியானது சுமாராக 10 மாதம் 15 நாட்கள் கழித்து பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிற நிலையில் மேற்படி உணவு மாதிரியானது 14 நாட்களுக்குள் ஆய்வு செய்யப்பட்டதாக தெரியவரவில்லை.

28) மேலும் மேற்படி உணவு பகுப்பாய்வாளர் இவ்வழக்கின் மாதிரிகளை 14 நாட்களுக்குள் ஆய்வு செய்ய இயலாத நிலையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டம் 2006, விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்– Rule of 2.4.2 Analysis of food samples by Food Analyst–provisio–ஆனது,

> Provided that in case the sample cannot be analysed within fourteen days of its receipt, the Food Analyst shall inform the Designated Officer and the Commissioner of Food Safety giving reasons and specifying the time to be taken for analysis

என்றுள்ள நிலையில் மேற்படி விதிமுறைகளுக்கு உட்பட்டு அரசு தரப்பில் மேற்படி உணவு பகுப்பாய்வாளர் நியமன அலுவலருக்கும் ஆணையருக்கும் இவ்வழக்கின் மாதிரிகளை 14 நாட்களுக்குள் ஆய்வு செய்ய இயலாத காரணத்தை தெரியப்படுத்தியதற்கான ஆவணம் அரசு தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

29) இந்நிலையில் மேற்படி டீத்தூளை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிய உணவுப் பகுப்பாய்வாளர் அதிகாரியை சாட்சியாக விசாரிணைக்கு உட்படுத்தி

அதற்கான காரணத்தை அரசு தரப்பில் தெளிவுபடுத்தவில்லை. மேற்படி டீத்தூளை ஆய்வு செய்து அ.சா.ஆ.10 ஆன ஆய்வறிக்கை வழங்கிய உணவுப் பகுப்பாய்வாளர் அதிகாரியின் மூலம் மேற்படி சோதனை அறிக்கை விசாரணைக்கு உட்படுத்தப்படாத நிலையில், இதனைப் பொறுத்து 2015(1) MLJ Cr.406 A.C.Selvam Vs Food Inspector Coimbatore Corporation என்ற வழக்கில்

> though report of public analyst informed that coloring substance “Tartrazine” used, public analyst who submitted such report not examined – in absence of examination of public analyst, nothing to indicate the basis of conviction. Defence denied opportunity to dispute report of public analyst. Petitioner acquitted of all charges

என்ற சட்ட முன்தீர்ப்பின் விளக்கத்தினையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொண்டு மேற்படி ஆய்வறிக்கையினை வழங்கிய உணவு பகுப்பாய்வாளர் அதிகாரியை இவ்வழக்கில் இந்நீதிமன்றத்திலும் விசாரணை செய்யாதது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக இருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

30) மேலும், மதுரை உணவு பாதுகாப்பு ஆய்வகமானது NABL ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசீலிக்கையில் உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டம் 2006, பிரிவு 43—ன் கீழ்,

> "43.Recognition and accreditation of laboratories, research institutions and referral food laboratory:-
>
> (1) The Food Authority may notify food laboratories and research institutions accredited by National Accreditation Board for Testing and Calibration Laboratories or any other accreditation agency for the purposes of carrying out analysis of samples by the Food Analysts under this Act."

என்றும்,

> "3.Definitions - (1) ... (p) "food laboratory" means any food laboratory or institute established by the Central or a State

Government or any other agency and accredited by National Accreditation Board for Testing and Calibration Laboratories or an equivalent accreditation agency and recognised by the Food Authority under section 43;"

என்றும் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட நிலையையும் இந்நீதிமன்றம் கருத்திற் கொள்கிறது.

31) மேற்படி இவ்வழக்கின் உணவு மாதிரிகளை ஆய்வு மேற்கொண்ட 27.05.2019 முதல் 10.06.2019 வரையிலான காலகட்டத்தில் மதுரை உணவு பகுப்பாய்வு ஆய்வகமானது NABL ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பதைப் பொறுத்து ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மேற்படி மதுரை உணவு மாதிரி ஆய்வகமானது டீத்தூளினை பகுப்பாய்வு செய்யப்பட்ட சமயத்தில் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனமாக இருந்துள்ளது என்பதைப் பொறுத்து அரசு தரப்பானது தெளிவுப்படுத்தவில்லை.

32) இந்நிலையில் அ.சா.1 ன் குறுக்கு விசாரணையில் அதிகபட்சம் டீத்தூளின் பயன்படுத்துவதற்கு வாழ்நாள் என்ன என்றால் எனக்கு தெரியாது என்றும், டீத்தூளினை பயன்படுத்தும் அதிக காலம் ஓராண்டு என்றால் பகுப்பாய்வாளரிடம் தான் கேட்க வேண்டும் என்றும், பொதுவாக குறிப்பிட்ட காலத்திற்குள் பகுப்பாய்வு செய்து இருந்தால் உண்மை தன்மை தெரிந்திருக்கும் என்றால் அது பகுப்பாய்வாளரிடம் கேட்க வேண்டும் என்றும் கூறியுள்ள நிலையில், மேற்படி உணவு மாதிரியை பகுப்பாய்வு செய்த பகுப்பாய்வாளரை விசாரணைக்கு உட்படுத்தாத நிலையில் 14 வருடம் அ.சா.1 ஆனவர் உணவு பாதுகாப்பு அலுவலராக பணியில் உள்ள நிலையில் அதிகபட்சம் டீத்தூளின் பயன்படுத்துவதற்கு வாழ்நாள் என்ன என்று தனக்கு தெரியாது என்று அ.சா.1 ஆனவர் கூறுவதும் ஏற்கும் வகையில் இல்லை. மேற்கண்ட சங்கதிகள் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது.

33) மேலும் அ.சா.1ன் முதல் விசாரணையில் டீத்துாள் டஸ்ட் தயாரிப்பு நிறுவனத்தின் கொள்முதல் ரசீது உள்ளதா என்று உரிமையாளரிடம் கேட்ட போது அவர் ரசீது இல்லை என்று கூறிவிட்டதாகவும், மேலும் ஏதாவது தவறு நடந்தால் நானே முழு பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதாக எழுதி கொடுத்தாகவும் கூறியுள்ளார். இந்நிலையில் மேற்படி அ.சா.ஆ.3 ஆன முழு பொறுப்பு என எழுதி கொடுத்த ஆவணத்தை பரிசீலிக்கையில் " என்னிடம் எடுக்கப்பட்ட Tea Dust தயாரிப்பு நிறுவனத்தின் இரசீது ஏதும் இல்லாததால் அதற்கும் உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச் சட்டத்தின் கீழ் நானே முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன் " என்று குறிப்பிட்டும் எதிரியின் கடையின் முத்திரை வைக்கப்பட்டு அதன் மேல் எதிரியானவர் 27/7/2018 என்று தேதியிட்டு கையொப்பம் செய்துள்ளார் என்பது தெரியவருகிறது.

34) இருப்பினும் எதிரி தரப்பில் அட்சயா பேக்கரி ஆரம்பித்த நாள் முதல் தற்போது வரை தரமான கம்பெனி டீத்துாள்களையே பயன்படுத்தி வருகிறார் என்றும், மேற்படி டீயின் சுவைக்காக AVT, 3 Roses, Gold Cup உள்ளிட்ட 3 வகையான டீத்துாளை பயன்படுத்தி டீ தயாரிப்பது வழக்கம் என்றும், மேற்படி வீதம் டீ தயாரிக்கும் போது அனைத்து விதமான டீத்துாள்களின் பாக்கெட்களையும் உடைத்து ஒன்றாக கலந்து ஏற்கனவே வைத்திருப்பார் என்றும், அவ்வாறு வைக்கப்பட்டிருந்த டீத்துாள்களில் இருந்து சேம்பல் எடுக்கப்பட்டுள்ளது என்றும் முன்மொழியப்பட்டுள்ள நிலையில், அ.சா.2 கணேசன் என்பவர் தனது குறுக்கு விசாரணையில் பொதுவாக டீக்கடையில் 3 roses, AVT and Chakra Gold போன்ற 3 விதமான டீத்துாள்களை கலந்து டப்பாவில் போட்டு உபயோகப்படுத்துவது வழக்கம் என்றால் ஆமாம் என்றும், அப்படி செய்யும் போது அந்த பக்கெட்டில் இருந்து தான் சாம்பிள் எடுத்தார்கள் என்றால் ஆமாம் என்றும் கூறியுள்ளார். இந்நிலையில் மேற்படி 3 roses, AVT and Chakra Gold என்ற 3 டீத்துாள்கள் கலந்து வைக்கப்பட்டதிலிருந்து தான் பகுப்பாய்வு

மாதிரிக்கு எடுக்கப்பட்டுள்ளது என்ற எதிரி தரப்பு வாதத்திற்கு ஒத்து போகும் வகையில் அ.சா.2 ஆனவரின் சாட்சியம் அமைந்துள்ளது.

35) மேலும் அ.சா.ஆ.10 ஆன உணவு பகுப்பாய்வு அறிக்கையினைப் பரிசீலிக்கையில் மேற்படி அறிக்கையின் விபரம்:–

Analysis Report

(i) Sample Description : 1kg of Sample was received in a Aluminium foil pack without label declaration

(ii) Physical : Dark brown coloured tea dust.

(ii) Label Declaration : No Label.

| S.No. | Quality Characteristics | Name of the method of test used | Result | Prescribed standards as per the Regulation 2.4.6(13) of FS & S(FPS & FA) Regulations, 2011 and any other provisions of the FSS Act. Rules and Regulations 2011 |
|---|---|---|---|---|
| 1. | Total Ash (On Dry Basis) | FSSAI Manual Method | 6.41% | Not less than 4% and not more than 8% |
| 2. | Water Soluble Ash (On Dry Basis) | FSSAI Manual Method | 57.04% | Not less than 45.0% of Total Ash |
| 3. | Acid – insoluble Ash (On Dry Basis) | FSSAI Manual Method | 0.65% | Not more than 1.0% |
| 4. | Alkalinity of water soluble ash expressed as KOH (On Dry Basis) | FSSAI Manual Method | 1.97% | Not less than 1.0% and not more than 3.0% |
| 5. | Water Extract (On Dry Basis) | FSSAI Manual Method | 44.60% | Not less than 32.0% |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | Crude Fibre | FSSAI Manual Method | 14.18% | Shall not more than 16.5% |
| 7. | Added colouring matter | FSSAI Manual Method | Positive : Sunset Yellow=95.72 mg/kg Carmoisine=71.10mg/kg Tartrazine=108.20 mg/kg | Shall be Negative |
| 8. | Iron Filing | FSSAI Manual Method | Absent | Shall not be more than 250 mg/kf |

RESULT:

I am of the opinion that the said sample is Unsafe under section 3(1)(zz) of the Food Safety and Standars Act, 2006, since it contains added colouring matters, the addition of which is not permitted for Tea under Regulation 2.10.1(1) of Food Safety and Standards (Food Products Standards and Food Additives) Regulations, 2011.

36) எனவே மேற்படி உணவு பகுப்பாய்வு அறிக்கையை பரிசீலிக்கையில் மேற்படி உணவுப் பொருள் Unsafe என்று சான்றளிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனினும் எதிரியானவர் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைச் சட்டம், 2006, பிரிவு 27 (3)–ன்படி The seller shall be liable under this Act for any article of food which is, உட்பிரிவு (e) " Received by him with knowledge of being unsafe " என்று கூறப்பட்டுள்ள சட்டநிலையின்படி மேற்படி டீத்தூளானது UNSAFE என அறிந்தே எதிரியானவர் பெற்று டீ விற்பனைக்கு பயன்படுத்தினார் என்பதை பொறுத்து அ.சா1 முதல் அ.சா.3 வரையானவர்கள் சாட்சியம் அளிக்கவில்லை. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ளது.

37) எனவே மேலே கண்ட விவாதங்களின்படி அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் மற்றும் முரண்பாடுகளைக் கருத்திற்கொண்டும்,

எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டைப் பொறுத்து அரசு தரப்பானது தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

38) முடிவாக அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006 பிரிவு 59(i)–ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

39) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் அது பற்றி உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. மேலும் இவ்வழக்கானது மேல்முறையீடு செய்யும் பட்சம் மாண்புமிகு மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்பிற்கிணங்க செயல்படவும் உத்தரவிடப்படுகிறது.

**Particulars under Rule 106 of Criminal Rules of Practice 2019**

| S. No | Description of the accused | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Cr.No | Name of the Police Station | Name | Father's Name | Occupation | Residency | Age |
| 1. | - | Food Safety Officer | A.Ramanathan | Aadhilinga Nadar | New Akshaya Bakery | 168-A, Dhali Road, Elaiyamuthur Junction, Udumalpet TK, Tirupupr DT. | 46/2019 |

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension | Release on Bail | Commitment | Commencement of Trial | Close of Trial | Sentence or Order | Service of copy of Judgment on accused | Explanation of Delay |
| 27.07.2018 | 08.11.2019 | - | - | Not applicable | 24.02.2025 | 06.04.2026 | 17.04.2026 | Nil | No Delay |

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.04.17 00:12:01 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.

**இணைப்பு :–**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 24.02.2025 | அம்ஜத் இப்ராஹிம் கான் (உணவு பாதுகாப்பு அலுவலர், உணவு மாதிரி எடுத்தவர் மற்றும் விசாரணை செய்தவர்) |
| அ.சா.2 | 08.10.2025 | கணேசன் (உணவு மாதிரி சாட்சி) |
| அ.சா.3 | 04.03.2026 | விஜயகுமார் (உணவு பாதுகாப்பு அலுவலர், புகார் மனு தாக்கல் செய்வர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ 1. | அ.சா.1 | படிவம் 5A |
| அ.சா.ஆ 2. | அ.சா.1 | ரொக்க ரசீது |
| அ.சா.ஆ 3. | அ.சா.1 | முழு பொறுப்பு என உரிமையாளர் எழுதி கொடுத்த கடிதங்கள்(எண்ணிக்கை 3) |
| அ.சா.ஆ 4. | அ.சா.1 | உணவு விற்பனையாளரின் வாக்குமூலம் |
| அ.சா.ஆ 5. | அ.சா.1 | படிவம் 6 |
| அ.சா.ஆ 6. | அ.சா.1 | நியமன அலுவலருக்கு கொடுத்த கடிதம் |
| அ.சா.ஆ 7. | அ.சா.1 | மாதிரி அரக்கு முத்திரை பதித்த தாள் |
| அ.சா.ஆ 8. | அ.சா.1 | ஒப்புகைக் கடிதம் |
| அ.சா.ஆ 9. | அ.சா.1 | படிவம் 6 மாதிரி அரக்கு முத்திரை பதித்த அறிக்கை அனுப்பியதற்கான ரசீது |
| அ.சா.ஆ 10. | அ.சா.1 | உணவு பகுப்பாய்வின் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ 11. | அ.சா.1 | உணவு மதிரியை அரசால் பரிந்துரைக்கப்பட்ட வேறு ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்ய விரும்பினால் பரிசோதனைக்குரிய தொகையுடன் 30 நாட்களுக்குள் முறையீடு செய்து கொள்ளலாம் என்று நியமன அலுவலர் கடையின் உரிமையாளர் ராமநாதனுக்கு அனுப்பிய கடிதம் |
| அ.சா.ஆ 12. | அ.சா.1 | குற்ற வழக்கு தொடர அனுமதி வேண்டி அனுப்பிய கடிதம் |
| அ.சா.ஆ 13. | அ.சா.2 | அ.சா.ஆ.1 ல் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ 14. | அ.சா.2 | அ.சா.ஆ.2 ல் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ 15. | அ.சா.3 | உணவு பாதுகாப்பு அலுவலர் என்பதற்கான அரசிதழ் |
| அ.ச.ஆ.16. | அ.சா.3 | ஆணையாளர் உத்தரவு நகல் |

**எதிரி தரப்பு சாட்சிகள் :- இல்லை**
**எதிரி தரப்பு சான்றாவணம் :- இல்லை**
**அரசு தரப்பு சான்று பொருள் :-இல்லை**
**குறிப்பு:-**

1. எதிரி விசாரணைக்காலத்தில் பிணையிலிருந்துள்ளார்.
2. எந்த சாட்சியும் 3 வாய்தாக்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.04.17 00:11:56 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.